# மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

2025-04-18

## திருப்பாடுகளின் வெள்ளி

### இன்றைய வாசகங்கள்:

ஏசாயா நூலிலிருந்து வாசகம் 52:13-43:12,

திருப்பாடல்கள் 31:1,5, 11-12,14-15, 24,

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4:14-16; 5:7-9,

யோவான் எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்

திருப்பாடுகள் 18: 1- 19: 42

### திருப்பலி முன்னுரை

அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அறிவிக்கிறீர்கள். அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள்.

நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக. இன்று புனித வெள்ளி. நம் ஆண்டவர் இயேசுவின், பாடுகள், மரணம் ஆகியவற்றை இன்று நாம் நினைவு கூருகின்றோம். இயேசு நமக்காகச் சிலுவைச் சாவை ஏற்று மரணித்த நாள், நாம் வாழ்வுபெற தன் வாழ்வையே கொடுத்த நாள். நமது துரோகத் தனங்களுக்காக அவமானத்தையும், வேதனைகளையும், அனுபவித்த நாள். நம் குற்றங்களுக்காகக் காயமடைந்த நாள், நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்ட நாள், நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்ட நாள். பாவத்தின் விளைவு மரணம். அதிலும் இறைமகன் இயேசுவின் பாடுகளும், வேதனைகளும் நிறைந்த சிலுவை மரணம் பாவத்தின் கொடூரத்தை உலகிற்கு பகிரங்கமாய் காட்டுகின்றது. நாமும் நம் பாவங்களுக்காய் இறப்போம். அப்போதுதான் எங்கும் பாவம் வலுவிழந்து வீழ்ந்து போகும். எனவே இறைவனின் வார்த்தையைக் கேட்டு இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றில் நம் மனம் பதித்து மனமாற்றம் அடைவோம் நம் வாழ்வில் புனிதம் பெறுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**தூய திருச்சபைக்காக:**

நம் இறைவனாகிய ஆண்டவர் திருச்சபைக்கு அமைதியும் ஒற்றுமையும் அளித்து, அதனைப் பேணிக்காக்க வேண்டுமென்றும், நாம் கலக்கமின்றி அமைதியான வாழ்வு நடத்தி எல்லாம் வல்ல இறைத்தந்தையை மகிமைப்படுத்த நமக்கு அருள்புரிய வேண்டுமென்றும் மன்றாடுவோமாக.

**நம் திருத்தந்தைக்காக மன்றாடுவோம்.**

தலைமை ஆயர் நிலைக்கு அவரைத் தேர்ந்தெடுத்த நம் இறைவனாகிய ஆண்டவர் எவ்வகைத் தீங்குமின்றி அவரைப் பேணிக்கர்ப்பாராக. இதனால் அவர் இறைமக்களை வழிநடத்தித் திருச்சபை வளம் பெறச் செய்யவேண்டுமென்று மன்றாடுவோமாக.

**திருச்சிபையில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்காக:**

நம் ஆயர் (பெயர்...)க்காகவும், திருச்சபையிலுள்ள எல்லா ஆயர்கள், குருக்கள், திருத் தொண்டர்க்காகவும், விசுவாசிகள் அனைவர்க்காகவும் மன்றாடுவோமாக.

**திருமுழுக்குப் பெறத் தயாரிப்புச் செய்வோர்க்காக:**

நம் இறைவனாகிய ஆண்டவர் தம் இரக்கத்தைப் பொழிந்து அவர்களுடைய இதயங்களைத் திறந்துவிடுவாராக் இவ்வாறு அவர்கள், புதுப்பிறப்பளிக்கும் திருமுழுக்கினால், பாவங்களுக்கெல்லாம் மன்னிப்படைந்து, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் வாழவேண்டுமென்று மன்றாடுவோமாக.

**கிறிஸ்துவர்களின் ஒற்றுமைக்காக:**

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ள நம் சகோதரர் சகோதரிகள் அனைவர்க்காகவும் மன்றாடுவோம். நம் இறைவனாகிய ஆண்டவர் தம்மில் விசுவாசம் கொண்டோர் அனைவரையும் உண்மையின் பாதையில் வழிநடத்தித் தமது ஒரே திருச்சபையில் கூட்டிச்சேர்த்துக் காத்தருள வேண்டுமென்று மன்றாடுவோமாக.

**யூத மக்களுக்காக:**

முற்காலத்தில் அவர்களோடு பேசிய நம் இறைவனாகிய ஆண்டவர், தமது திருப்பெயரின் மீதுள்ள அன்பிலும் தமது உடன்படிக்கை மீதுள்ள பற்றுறுதியிலும் இவர்களை வளர்ச்சியடையச் செய்தருள வேண்டுமென்று மன்றாடுவோமாக.

**கிறிஸ்துவில் இன்னும் விசுவாசம் கொள்ளாதவர்களுக்காக:**

இவர்கள் தூய ஆவியின் ஒளியைப் பெற்று மீட்புப் பாதைக்கு வந்துசேர வேண்டுமென்று மன்றாடுவோமாக.